2020.04.20 தொடர்பு எண்: 32/04/011/0001/002

சேரல்: முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்/ பொது முகாமையாளர் - பங்கேற்கும் அனைத்து நிதியியல் நிறுவனங்கள்

கனம் ஐயா/ அம்மணி

**“சௌபாக்யா கொவிட் 19 புத்துயிரளித்தல் வசதி”**

## தொழிற்பாட்டு வழிகாட்டல்: 01

இது, 2020.04.01 திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்-கொவிட்19/2020/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் பின்னர் பணிப்பாளர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட 2020.04.13 திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்-கொவிட்19/2020/01(A-01) கொண்ட திருத்தம் என்பன தொடர்பானதாகும்.

சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் சுமுகமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தப்படுவதற்காக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் தெளிவான தன்மையினை மேலும் அதிகரிக்கும் பொருட்டு கீழேயுள்ள வழிகாட்டல்கள் விடுக்கப்படுகின்றன.

1. தகைமை:

(அ) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் நாணயச் சபை சுற்றறிக்கை இல. 05/2020 இன் பிரிவு 2(i)இல் குறிப்பிடப்பட்டவாறு பின்னர் செய்யப்பட்ட திருத்தம் என்பனவற்றின் நியதிகளில் தயாரிப்பு, பணிகள், வேளாண்மை, கட்டடவாக்கம், சுயதொழில்கள், வியாபாரம் மற்றும் தனிப்பட்டவர்கள் உட்பட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்களும் சுற்றுலா, ஏற்றுமதிகள் மற்றும் அவை தொடர்பான வசதிகளின் வழங்குநர்கள் ஆகியவை மாத்திரமே இவ்வசதிக்கு தகைமையுடையனவாகும்.

(ஆ) கடன்பாட்டாளரொருவர் பல வங்கிகளில் வங்கித்தொழில் வசதிகளைக் கொண்டிருந்தாலும் கூட அக்கடன்பாட்டாளர் (வியாபாரம்) ஒரு கடனுக்கு மாத்திரமே தகைமையுடையவராவர். எனவே, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளர் இதே திட்டத்தின் கீழ் கடன்களுக்காக மற்றைய வங்கிகளை அணுகவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் கடன்பாட்டாளரிடமிருந்து எழுத்து மூலமான உறுதிப்படுத்தலொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(இ) மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வழங்கப்பட்ட பிணை வசதிகள் உட்பட, பேணப்படும் வங்கிக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டு கடன்பாட்டாளரின் உண்மையான தகைமையினை மதிப்பிடுவது அவசியமாகும்.

2. கடன் அளவு

(அ) தகைமையுடைய கடன்பாட்டாளரொருவருக்கான (வியாபார) உயர்ந்தபட்சக் கடன் தொகை தொடர்பான வியாபாரத்தின் இரண்டு மாத தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டுத் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளர்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைச் சரியான முறையில் மதிப்பிடுமாறும், வழங்கப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில் கடன் அளவிற்கு இணங்கிக் கொள்ளுமாறும் கேட்டு கொள்ளப்பட்டன.

(இ) நிதிக்கான தேவைப்பாட்டினை மதிப்பிடும் பொழுது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இரண்டு மாத காலப்பகுதியில் ஏற்படக்கூடிய சம்பளங்கள்/ கூலிகள் போன்ற கடப்பாட்டுச் செலவினங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) தொழிற்படு மூலதனத்தின் வழமையான கூறுகளான மூலப்பொருட்கள் போன்றவற்றை வியாபாரம் தொழிற்படாமல் இருக்குமாயின் நீக்கிவிடுதல் வேண்டும்.

3. முன்னுரிமை

(அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்கள் தொழில் வாய்ப்பு மற்றும் உற்பத்தியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இன்றியமையாதனவான வியாபாரங்களிலிருந்தும் வருகின்ற விண்ணப்பங்களுக்கு முன்னுரிமையளித்தல் வேண்டும்.

(ஆ) இது தொடர்பில், முதல் முன்னுரிமை ரூ.10 மில்லியனுக்கும் குறைவான தொழிற்படு மூலதனத்துடன் முகாமைப்படுத்தப்படக்கூடிய நுண்பாக, சிறியளவு வியாபாரங்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் இரண்டாவது முன்னுரிமை ரூ.10 மில்லியனுக்கும்

ரூ.25 மில்லியனுக்குமிடையிலான தொழிற்படு மூலதனத்துடன் முகாமைப்படுத்தக்கூடிய நடுத்தர மற்றும் உயர் நடுத்தரளவு வியாபாரங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

(இ) ஏனைய தகைமையுடைய வியாபாரங்களிடமிருந்தும் மற்றும் ரூ.25 மில்லியனுக்கும் மேற்பட்ட தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைக் கொண்ட வியாபாரங்களிடமிருந்தும் கிடைக்கும் விண்ணப்பங்களைப் பொறுத்தவரை, தொழில் வாய்ப்பிற்கும் உற்பத்திக்குமான அத்தகைய வியாபாரங்களின் முக்கியத்துவத்தினைப் பொறுத்து இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆலோசனையுடன் ஒவ்வொரு விடயமாகப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு குறைக்கப்பட்டமையினூடாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய தளர்த்தல்களூடாகவும் கிடைக்கத்தக்கதாகவிருக்கும் மேலதிக திரவத்தன்மையினைப் பயன்படுத்தி அவர்களது சொந்த முன்னெடுப்புக்களின் அடிப்படையில் பாரிய வியாபாரங்களுக்கு தொழிற்படு மூலதன கடன்களை வழங்கலாம்.

4. ஏனைய தேவைப்பாடுகள்

(அ) தொழிற்படு மூலதனத் தொகையினை மதிப்பிடுவதற்காக தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்துத் துணை ஆவணங்களும் கடன் செயன்முறைகளை மேற்கொள்வதற்கு முன்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வசதியைப் பயன்படுத்துகின்ற வியாபாரங்களிடமிருந்து அவர்களது ஊழியர்களின் எண்ணிக்கையில் குறைப்போ அல்லது அவர்களுக்கு தொழில் இழப்போ ஏற்படாது என்பதனையும் ஊ.சே.நிதியம் மற்றும் ஊ.ந.நிதியம் உட்பட பொருத்தமான ஊதியங்கள் பாதுகாக்கப்படும் என்பதனையும் உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூலமான உத்தரவாதமொன்றினைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

(இ) இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க, 2020.04.24ஆம் நாள் வெள்ளிக்கிழமை தொடக்கம் vijitha@cbsl.lk மற்றும் anuruddika@cbsl.lk என்பனவற்றினூடாக வாராந்த அறிக்கைகளை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இவ்வழிகாட்டலின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தங்களுக்கு நன்றி

**எம்.எஸ்.கே தர்மவர்தன**
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**